


கோவை காருண்யா பல்கலையில் நடந்த அகில இந்திய அளவிலான வினாடி வினா போட்டியில் புதுச்சேரி பெட்டிட் செமினரி பள்ளி முதலிடம் பெற்று ரூ.15 ஆயிரம் பரிசு பெற்றது.

# கோவை காருண்யா பல்கலையில் வினாடி வினா இறுதி போட்டி

## புதுச்சேரி பள்ளிக்கு முதல் பரிசு

**கோவை, நவ.30:** கோவை காருண்யா பல்கலையில் அகில இந்திய அளவிலான வினாடி வினா இறுதி சுற்று போட்டிகள் நடந்தது. துணை வேந்தர் சுந்தர் மனோகரன் தலைமைவகித்தார். பதிவாளர் ஜோசப் கென்னடி துவக்கி வைத்தார். தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் நடைபெற்ற முதல் சுற்று போட்டிகளில் 62 பள்ளிகளில் இருந்து சுமார் 5 ஆயிரம் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதில் 19 பள்ளிகள் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினர். இறுதி சுற்றில் 8 அணிகள் பங்கேற்றனர். இறுதி சுற்று போட்டிகளில் புதுச்சேரி பெட்டிட் செமினரி பள்ளி முதலிடம் பெற்று ரூ.15 ஆயிரம் பரிசு பெற்றது. கோவை எஸ்.எஸ்.வி.எம்.பள்ளி இரண்டாம் இடத்தையும், மூன்றாம் இடத்தையும் பெற்று முறையே ரூ.10 ஆயிரம் மற்றும் ரூ.7 ஆயிரத்தையும் பெற்றனர். பல்கலை தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ஹெப்சிபா வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், விருதுகளையும் வழங்கினார்.